தினமலர் (08.02.2025)



பள்ளி வளாகத்தில் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர், ரூபா, துணைத் தலைவர் சதீஷ் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டு வைத்த போது எடுத்த படம். அருகில் பள்ளி தலைமை ஆசிரியர் லதா, வார்டு உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

### டி.என்.பி.எல். காகித நிறுவனம் சார்பில்

# ரூ.7 லட்சத்தில் தவுட்டுப்பாளையம் அரசு நடுநிலைப்பள்ளி சீரமைப்பு

வேலாயுதம்பாளையம், பிப்.8—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் ரூ.7 லட்சம் செலவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி புனரமைத்து திறந்து வைக்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, கிழக்கு தவுட்டுப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை ப்பள்ளியை ரூ7.லட்சம் செலவீட்டில் பள்ளிகட்டிடம், கழிப்பறை புனரமைத்தல், புதிய தரைதளம் அமைத்து வர்ணம் பூசுதல், கதவு மற்றும் ஜன்னல்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் செய்து தரப்பட்டது. புனரமைக்கப்பட்ட பள்ளிக்கட்டிடம் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டது.

கிழக்கு தவுட்டுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலை ப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் மற்றும் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபா ஆகியோர் பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்து, பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

நிகழ்ச்சியில் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் துணைத் தலைவர் சதீஷ், பள்ளி தலைமை ஆசிரியை லதா, வார்டு உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தினகரன் (08.02.2025)**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில்

# ₹7 லட்சத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி புனரமைப்பு



காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே கலைச்செல்வன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர், சி.ரூபா முரளி ராஜா திறந்து வைத்து மரக்கன்று நட்டு வைத்தனர்.

வேலாயுதம்பாளையம், பிப். 8: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நடையனூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, கிழக்கு தவிட்டுப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியானது ரூ.7.00 இலட்சம் தமிழ்நாடு காகித ஆலை சார்பில் நீர் ஒழுக்கு பள்ளி கட்டடம் கழிப்பறை புனரமைத்தல், புதிய தரைதளம் அமைத்து வர்ணம் பூசுதல், கதவு மற்றும் ஜன்னல்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் செய்து தரப்பட்டது.

புனரமைக்கப்பட்ட பள்ளிக்கட்டிடம் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக பொது மேலாளர் கே கலைச்செல்வன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் சி.ரூபா முரளி ராஜா ஆகியோர் பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்து, மரக்கன்றுகளையும் நட்டு வைத்தனர். இந்நிகழ்ச்சியில் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் துணைத் தலைவர் சதீஷ், பள்ளி தலைமை ஆசிரியை லதா, வார்டு உறுப்பினர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.